சிந்தனைச்சுட

53

சி.பி.சிற்றரசு

ாற்பதிப்புக்கழகம்

O-,6NCI,C
N50
111767

தென்றல் வெளியீடு. ரு.

சிந்தனைச்சுடர்.

535/...
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 DEC 1958
MADRAS

ஆசிரியர்:
சி. பி. சிற்றரசு.

தென்றல் நூற்பதிப்புக் கழகம்,
சலகண்டபுரம்: : : (சேலம் மாவட்டம்.)

CHINTHANAI CHUDAR.

(ALL RIGHTS RESERVED.)

O76NCI,C
N50

Published by :
THENRAL BOOKS PUBLISHING SOCIETY.
Printed at :
THE SENTHAMIZH PRINTING WORKS,
Jalakantapuram. - - Salem Dist.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 111767
EGMORE, MADRAS

விலை : அணு 0-5-0.

முன்னுரை.

நெடு நாட்களாக என் சிந்தனையில் கொந்தளித்துக்கொண்டிருந்த எண்ணங்களைத் தொகுத்து வைத்திருந்தேன். அவற்றை அச்சேற்றி நூல் வடிவமாக்கப் பல தோழர்கள் முயற்சி செய்தார்கள். எனினும் சுட்டிக்காட்ட முடியாத எக்காரணத்தினாலோ முடியாமற் போய்விட்டது.

இறுதியில், எனது பொது வாழ்விலும், சொந்த வாழ்விலும் கண்காணிப்போடு, உதவியும், ஆறுதலும் அளித்து வரும், நமது பழங்கால நண்பர், சலகண்டபுரம், தோழர். ப. கண்ணன் அவர்கள், இந்த முயற்சியில் ஈடுபட்டார்; நல்ல முறையில் புத்தகம் உருப்பெற்றது. அவரது பெருங்குணத்தைப்பாராட்டுகிறேன். மேற்கொண்டு அவர் எடுத்துக்கொள்ளும் பிரசுர முயற்சிகளுக்கும், நான் பெரிதும் கடமைப் பட்டவனாகின்றேன். தோழர்களனைவரும், எங்கள் சிறிய பணியை ஆதரித்து, மேலும் ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

சேலம்,
20—9—50.

அன்பன்,
C. P. சிற்றரசு.

பதிப்புரை,

சிந்தனை, மனிதனின் மதிப்பிடற்கரிய சம்பத்து. மற்ற உயிரினங்களிடம் காணக்கிடைக்காத தனிப் பண்பு. சிந்தனைதான் மனிதனை மனிதனுக்குகிறது என்றே சொல்லலாம்.

மனம், மொழி, மெய், இம்மூன்றின் ஒருமித்த பயனே நாகரிகத்தின் பிறப்பு. முதலாவது மனம்—மனதின் தொழிற்பாடாகிய — சிந்தனை, அடுத்தாற் போல் பேச்சு, அதற்கடுத்ததே செயல்! எனவே சிந்தனை எதற்கும் முதன்மையானது, முக்கியமானது என்பதில், எவர்க்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. அத்தகைய சிந்தனையின் தன்மை, பயன், விரிவு, விளைவு, ஆகியவற்றை, வரலாற்று ரீதியிலே வடித்துக் கொடுக்கிறது இச்சிறு நூல்.

தோழர். சி. பி. சிற்றரசு அவர்கள், திராவிடத்துக்குப் புதியவரல்லர். நீண்டகாலப் பகுத்தறிவுத் தொண்டர். " தீப்பொறி " ஆசிரியர். தனது கனல் தெறிக்கும் சொற்பொழிவு மூலம், நாடு நகரம், பட்டி தொட்டி, மூலை முடக்குகளில் எல்லாம், சிந்தனைச் சுடர் கொளுத்தியவர். உழைப்பில் சளைக்காதவர். அவர் எழுதிய, மிகப்பயனுள்ள ஆராய்ச்சி நூல் இச் " சிந்தனைச்சுடர். " இதை வெளியிடும் வாய்ப்பளித்த அன்னாருக்கு எமது நெஞ்சுகந்த நன்றி. இச்சிறு முயற்சியைத் திராவிடம் ஏற்றருளுமாக !

தென்றல் நூற்பதிப்புக் கழகத்தார்.

சிந்தனைச் சுடர்.

தோற்றம்.

அவன்தான் சிந்தனைச் சிற்பி. கலங்கரை விளக்கத்தின் மேல் நின்று, கண்ணால் அளந்து பார்க்க முடியாத கடலைக் காண்கின்றான். ஓயாது அடிக்கும் அலைகள், ஒவ்வொரு உயிரினத்தின் கடமையைச் சுட்டிக் காட்டுவதைப் போலிருக்கின்றன. மிதக்கும் மரக்கலம், பாறையில் மோதிச் சுக்குகள் பலவாய் பிரயாணிகளைக் கொல்லும் பயங்கர ஆபத்தைத் தடுக்க, இக்கலங்கரை விளக்கம் எத்தகைய தேவை என்று எண்ணுகின்றான். இது மந்திரவாதியின் மாயாஜாலமல்ல. பலநாள் சிந்தித்துப் பலமுறை முயன்று, முயற்சியில் தோற்று, ஆனாலும் விடாது அறிவோடு போராடிக் கடைசியில் அறிவு தன்னிடம் சரணாகதியடைய, அதைத் தன் முயற்சியெனும் சிறையில் தள்ளி ஊதிய வெற்றிச்சங்கின் ஓசைதான் இந்த நீலநிறக் கடலருகே நிற்கும் ஒளிச்சுடர், என எண்ணுகிறான். முயற்சி எழுச்சியின் இயக்கம். இருண்ட கடலில் அருமையான முத்துக்களை அகழ்ந்தெடுக்க முயலும் தன்னைச் சுறுமீன் சூறையாடி விடும் என்று அவனுக்கு நன்றாகத் தெரியும். ஆயினும் அவன் முயற்சியில் தளர்வதில்லை.

மேலே நிற்கிறான் வெளியுலகைக் காண. அந்தந்த நாட்டு மரக்கலத்தை வா! வா! என்றழைப்பதைப் போலத் தனது சுடர்க்கைகளால் வரவேற்கின்றது, அப்பெருஞ்சுடர்.

வா என்றழைக்கும் கலங்கரை விளக்கம், வந்துகொண்டிருக்கும் கப்பல், அதைத் தாங்கி நிற்கும் கடல், அதை நெட்டித் தள்ளும் அலைகள், அந்த பயங்கரக் கடலுக்கு ஒழுங்கான கடல் வழி வகுத்துத்தந்த கொலம்பஸ், மார்க்க போலோ, வாஸ்கோடிகாமா, போன்ற அலையாண்ட கடலை, அடக்கி யாண்ட மேதைகளின் சிந்தனை, அந்தக் கப்பல் ஏற்றிவந்த விஞ்ஞானப் பொருள்கள். அவை

களைச் செய்து முடித்த பாட்டாளிகளின் கைத்திறன், அதற்காக அவர்களுக்குத் தாராளமாகத் தர பண உலகம் ஒப்புக்கொண்ட கசையடி, சிறைவாசம், பஞ்சம், பிணி, அவர்களை முகம் சுளிக்காமல் மனமாரப் பிடுங்கித்தின்ற மனித வல்லூறுகள், அவைகளுக்குப் பக்கமேளமா யமைந்த பொருளாதார பேதம், அதற்கு நங்கூரமா யமைந்த பிறவி பெதம், ஆகிய நினைவுகள், ஒன்றுக்கொன்று போட்டியிட்டுக் கொண்டு, அவன் இருதய பீடத்தைத் தாக்கித் தகர்த்தெறியப் பார்க்கின்றன. பெருமூச் செறிந்தான். மற்றோர் பக்கம் திரும்பினான்.........

நாட்டு நிலை.

அவமதிப்பு, அசட்டுத்தனம், அதட்டும் சொற்களோடு, அவன் யாரோ ஏழைப் பிச்சைக்காரன் என்று, அடையாளந் தெரிந்து கொள்ளாத நிலைமையில், எவ்வளவோ பேர்களைச் சமூகம் ஒழித்துத் தள்ளியிருக்கிறது. உரிமை வேட்கையால் பல கேள்விகளைக் கேட்க, அந்த ஏழையின் உதட்டின் ஓரம்வரையில் வருகிறது அவனது குமுறிய எண்ண வேட்டுகள். ஆனால் யார் செவிசாய்க்கப் போகின்றார்கள்? கோயிலிலே திருநாள், விழா. அண்ட சராசரங்களைப் படைத்துக் காத்ததாகச் சொல்லப்படும் பரந்தாமன் ஊரிலே உலாவரும் நாள். தேங்காயும் பழமும் அவனுக்குப் படைக்கப் படுகின்றன. அவனால் படைக்கப்பட்டதாகச் சொல்லப் படும் பரம ஏழை, ஓடேந்தி வீடு வீடாக உலவுகிறான். அவன் பெறுவது ஏச்சும் பேச்சும். எங்கேயோ இரண்டோர் பருக்கைகள்! காய்ந்த வயிறினன், கண நேரம் சிந்திக்கின்றான். உணருகின்றான் இது முதலாளிகள் நாடு என்பதை. ஆண்டவனும், அவன் அருட் கடாட்சத்தால் பணம் பெற்றோரும், முதலாளிகள்தானே? பஞ்சையாய்ப் போனதன் காரணத்தைச் சிந்திக்கின்றான். உழைப்பு உறிஞ்சப்பட்டு, வாழ்க்கைக்கேற்ற பயன்காட்டாத மூலாளிகள் நிலை, எஞ்சி நிற்பன எம்பிரானின் ஏகபோக விழா, விருந்து, வெடி என்பனவற்றிலே ஒருபகுதி விரயமாவதும், முக்தியின் தத்துவார்த்தம் கூறித் தரகராகும் தம்பிரான்களின் தட்சணைப் பங்கும், அவனை பிரமிக்க செய்கின்றன.

உரிமையெண்ணம் எழுகிறது. ஆவலின் ஒளி இதயத்தின் கடலடிவாரத்தைத் தேடுகிறது. எண்ணம், சிந்தனை, உணர்வு, நினைவு, அறிதல், அனைத்தும் அதிற் கிடக்கும் முத்துக்கள். இதயத்தின் அணிகலன்கள், வாழ்விற்கு இன்றியமையாதன. ஒவ்வொரு எண்ணத்தின்போதும் எழும் எழுச்சி, புரட்சியின் வாடை. புரட்ட்சிப் பயிரின் அறுவடைதான் புதுமை; புதுமையின் பிறப்பகந்தான் நாகரிகத்தின் படி.

புதுமை உணர்ச்சி.

ஏகபோகத்திலே திளைத்த மந்தகாச வாழ்வினர் மதியிலே பூப்பதல்ல புதுமை. விலா நோக வியர்த்துழைத்து, வேதனையிலே வாடுவோரின் இருண்ட வாழ்வின் இடையிலே சுழன்று கொண்டிருப்பது புதுமை.

குப்பை குவிந்து கிடக்கிறது. சிறு தீப்பொறி, அனைவர் உள்ளத்திலேயும், அடிவயிற்றிலேயும் அன்றாட வேதனை வாழ்க்கைப் புயலிலே கனன்று கொண்டிருக்கின்றது. அறியாமை என்னும் சாம்பல் அகற்றப்பட்டால், காணப்படும். கனலின் தன்மை, சிந்தனையைச் சிதைப்பதல்ல. சிறைவாசம்! திருந்துவான் என்பதற்காகத்தான் சிறைத்தண்டனை அளிக்கப் படுகிறது. ஆனால் இன்று சிறை பிழைபடப் பயன் படுத்தப்படுகிறது. மக்களின் முன்னேற்றமே நாகரிக மென்போர் சிலர். "கலை வளர்ச்சி, விஞ்ஞான விருத்தி, அரசியல் நேர்மை இம்மூன்றுமே நாகரிகம்" என்றார் ஜோட் (**JOAD**) எனும் ஆங்கில ஆசிரியர். அறிவே விஞ்ஞானம், புதுமையுணர்வு, அதன் முதிர்ச்சிதான் நாகரிகம். புதிய உணர்ச்சியே புதுமையின் அடிப்படைதான்.

புரட்சி வகை.

வேளாளரின் வறுமை, வீணரின் வெறியாட்டம், அரசனின் அறியாமைகலந்த ஆணவம் ஆகியவையே, அன்று வீர ரஷ்யாவிலே தோன்றிய புரட்சிக் காரணங்கள்! முடியாட்சி மாண்டு, குடி

யாட்சியைத் தோற்றுவித்த அமெரிக்க இயக்கத்தை, புரட்சி என்றுதான் கூறினார்கள். கைத்தொழிலனைத்தும் இயந்திரங்களால் இயக்கத் துவக்கிய காலம். இங்கிலாந்திலே அது இயந்திரப் புரட்சி என்றழைக்கப் பட்டது. விவசாயிகளின் வேதனையை விலக்கப் பாடுபட்ட பல இயக்கங்களைப் புரட்சி இயக்கங்கள் என்றே அழைக்கப்பட்டன.

பகுத்தறிவாலுதித்த புதுமைப் போராட்டம், பின்னர் புரட்சி எனவே அழைக்கப்படும். அடிப்படையின் மாற்றம்—போராட்டம்—அதன் முழு வடிவப் பெயர் புரட்சி. புரட்சி வேகம் ஒளி வீசத்தலைப்பட்டால், மக்களை மறைத்துக் கிடக்கும் இருள், ஒளியால் நீக்கப்பட்டு, உழைப்பால் பெறும் ஊதியத்தைக் கொண்டு ஒய்யார வாழ்வினைக் காட்டித் திருத்தி அமைக்கப்படுவது புதுச் சமுதாயம் அன்றோ?

இராணுவப் பயன்.

வேதனை, வறுமை, இல்லையெனும் கொடுமையை ஒழிக்க, புது வாழ்வின் போராட்டக் காரணங்கள் பகுத்தறிவால் பூத்து, பிறர் தாக்குதலால் கட்டுக் குலையாதிருந்தாலன்றி, புரட்சி வெற்றிபெற முடியாது. "ஒன்றுபட்டா லுண்டு வாழ்வு" எனப் பறைசாற்றுகின்றோம். நாட்டிலே அமைக்கப்படும் இராணுவம் தற்காப்புக்காகவும், பிறர்க்குப் பணியாது, தனித்து உரிமையோடு வாழ்வதற்காகவும்தான். உரிமை வேட்கை, பணியாத தன்னுணர்வு இவைகள் மறைக்கப்பட்டு, நாடு பிடிக்கும் பேராசைக்கு, நாட்டு மக்களைப் பணிய வைக்கும் போர்வாளாகப் பயன் படுத்தப் படுகிறது இந்நாளைய ராணுவம்! பகுத்தறிவு உலகம் இதைப் பார்த்து எள்ளி நகையாடி, கைகொட்டிக் கேலி செய்கிறது. இராணுவ அமைப்பிலே, மதச்சின்னமோ சாதிப்பூசற்குறியோ தடை செய்யப் பட்டு, ஒன்றிய உடையும் நடையும், கட்டாயப் படுத்தப்படுவது எல்லாரும் ஒன்றுபடவும், வேற்றுமை கொள்ளா திருக்கவும் சகோதரத்துவம் சரியாது குடி கொள்வதற்குமன்றோ?

அதுபோலவே திராவிடச் சமுதாயத்தின் ஒன்றிய வாழ்வு,

சாதிப்பட்டமும், சமயக்குறியும், இனச்சின்னமும் நீக்கப்படுவதாலேயே சாத்தியமாகும். இதை நடுநிலையிலிருந்து, ஆராய்ந்து பார்க்க நமக்குச் சிந்தனையும், வாதப்போர் நடத்தத் தன்னடக்கமும் வேண்டும். முதன் முதல் சிந்தனையென்றால் என்ன என்பதைத் தெரிந்து கொண்டு, மேலால் செல்வோம்.

நாகரிகத்தின் அடிப்படை.

"சிந்தனை செய்யாத மனமும், செயலாற்றாத வாழ்வும் சவக்குழியில் சரண்புக" என்றார் மேலைநாட்டு அறிஞர் ஒருவர். அதன்படி எந்தச் சமூகம் சிந்திக்க மறுக்கின்றதோ, அந்தச் சமூகம் செயலற்றுப் போகும்.

18-ம் நூற்றாண்டில் ஜெர்மானியர்கள் சிந்தனையற்றுக் கிடந்ததன் விளைவாகவே, யூதர்கள் தங்கள் ஆதிக்கத்தை வேரூன்ற முடிந்தது. பல நாட்கள் நீக்ரோக்கள் சிந்தனையற்றிருந்ததால், அடிமைத் தளைகளை ஆபரணமாகக் கொள்ள நேர்ந்தது. பண்டைய கலைகளுக் கெல்லாம் தாயகம் எனப்பெயரெடுத்த சீனநாடு, சிந்தனையற்றிருந்ததால் அமெரிக்காவும், ஐரோப்பாவும், ஜப்பானும் அதன்மேல் ஆதிக்கம் கொள்ள நேர்ந்தது. நெடுங்காலமாக மாஸ்கோ சிந்தனையற்றிருந்ததன் விளைவாகவே, மாஸ்கோ மங்கோலியாவுக்கு அடிமைப்பட்டுக் கிடந்தது. அதன் பிறகு கி. பி. 1480-ல் சிறந்த சிந்தனையாளனான பயங்கரஜவான் காலத்திலேயே சுதந்திர மடைந்தது. ஆகவே சிந்திப்பதன் முடிவே செயல் என்றும், செயலின் முடிவே பயன் என்றும், பயனின் முடிவே வாழ்வென்றும், வாழ்க்கையின் முடிவே வளம் என்றும், வளத்தின் முடிவே நாகரிக மென்றும் அறிகிறோம்.

சிந்தனையின் விரிவு.

சிந்தனை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் சுருங்கி அடங்குவதல்ல, அந்தச் சிந்தனையை ஓடும் தூரத்திற்கு ஓட்டி, ஒரு முடிவைக் காணும் நிலைமையை எல்லோரும் அடைவதில்லை. அதற்குக் கார

ணம் பற் பலர் பற்பல விதமாகச் சொன்னாலும், நாமறிந்த மட்டில் சிந்தனையை ஒரு கடல் என்றே சொல்ல வேண்டும்.

எப்படிக்கடல், தன்மேல் மிதக்கும் பொருள்களைத் தாங்கி, மிதக்க முடியாத பொருள்களைத் தன்னடிவாரத்தில் கொண்டு போய்ச்சேர்த்துவிடுமோ அதேபோல், முடிவு காணமுடிந்ததைக் கண்டு, காணமுடியாத முடிவுகளைக் கடவுள் செயல் என்ற முடிவுக்கே விட்டு விடுகிறார்கள். சிந்தனையைச் செல்லும்வழி செலுத்தச் சிறந்ததோர் மனப்பண்பு வேண்டும். எப்படிப் பாதையில் வேகமாய் ஓடும் வண்டி, பலருக்குத்தன் வருகையைத் தெரிவித்து, பல வண்டிகளுக்கும் வழிவிட்டு ஒதுங்கி ஓடுமோ, அதேபோல் தன் சிந்தனையைப் பல எண்ணங்களோடு மோத விடாமல், சிந்திக்கத் தொடங்கிய ஒன்றையே பின்பற்றி, நேரிய வழியில் முடிவுகாண முயலுதல் வேண்டும்.

மனத்திண்மை.

இதைப்பற்றி நெப்போலியனுக்கும், சில நண்பர்களுக்கும் உரையாடல் நிகழ்ந்தபோது, நண்பர்கள் கேட்டார்களாம் நெப்போலியனைப் பார்த்து: "எப்படி நீங்கள் ஒரு பொருளைப்பற்றிப் பேசும் போது, மற்றவைபற்றித்தொடாமல் எடுத்துக்கொண்ட பொருளைப் பற்றியே பேசி முடித்து விடுகின்றீர்கள்?" என்று. அதற்குக் கீழ்க்கண்டவாறு பதிலளித்தாராம் நெப்போலியன். "என்னுடைய சிந்தனையிலே பற்பல தனித்தனி அறைகள் அமைத்திருக்கின்றேன், புறாக்களுக்குக் கூண்டு அமைத்திருப்பதைப்போல! எந்தப் பொருளைப் பற்றிப் பேச நான் நினைக்கின்றேனோ, அந்தப் பொருளைப் பற்றியே நினைத்து, அந்த அறையைத் திறந்து, மற்ற அறைகளை மூடி விடுவேன். அதனால் திறந்த அறையிலிருந்து பேச ஒப்புக் கொண்ட பொருளைக் குறித்தே வரும். அதையே பேசி, அப்படியே முடித்து விடுவேன், அவ்வளவுதான்." அதே போல் ஒன்றை நினைக்கும்போது மற்றொன்று வந்து அதை மோதாமல் செய்து கொள்ள மனத்திண்மை வேண்டும்.

நல்லதும் தீயதும்.

தீயதை நினைக்கின்ற ஒருவன் நல்லதைச் செய்ய முடியா தென்றும் நினைப்பதற்கில்லை. அழுக்கையும், ஆபாசப் பொருள் களையும் அடக்கி வைத்திருக்கும் கடலில், முத்துக்களும் உண்டல் லவா? அதேபோல் நல்லதைச் செய்தான் என்று சொல்லி வாய் மூடுவதற்குள் தீயதை அவனிடமே காண்கின்றோம், மின்னிய மேகத்தை அண்ணாந்து பார்ப்பதற்குள் முத்து நீர் முகத்தில் தேங்கு வது போல! தப்பித்தோடும் கப்பலைத் தாங்கும் கடல், அதை உடைத்தெறியும் நீர்மூழ்கிகளையும் தாங்குகின்றதல்லவா? மீனை இரையாகத்தேடி அலையில் மிதக்கும் மனிதனை, அதே மீன் இரை யாகக் கொள்ளவில்லையா? அதேபோல் சிந்தனையில் நல்லதும் தீயதும் மாறி மாறி வரக்காண்கிறோம்.

இது உண்மையா ?

இந்த ஆராய்ச்சியைப் பார்க்கும்போது, ஏதோ ஒன்று நம்மை இப்படியெல்லாம் ஆட்டிப்படைக்கின்றது என்ற சொல்லால் ஆறுத லடைகின்றார்கள். இது உண்மைதானா? இன்னமும் சிந்தனைக்கு எல்லையுண்டா? மேல் நோக்கும் எண்ணங்களை, பொதுவாக எதிலும் பற்றில்லாமல், ஏதோ ஒரு குறிக்கோளை நோக்கி ஓடிக் கொண்டிருக்கும் எண்ணங்களை, திசைதப்பிய மாலுமியைப்போல் பாறையில் மோதிய ஓடம்போல், முதல் சந்திப்பிலேயே முணு முணுக்கும் மனைவியைப்போல், அழைத்தவுடன் வராத குழந் தையைப்போல், சரியான நேரத்தில் நினைவுக்கு வராத செய்தி யைப்போல், ஊர்ப்பிரயாணத்தில் தவறி விட்டுவிட்ட வண்டியைப் போல், சிதறடிக்காமல் பார்த்துக்கொள்ளும் வாய்ப்பு, எங்கேயோ ஒரு சிலருக்குத்தான் ஏற்படுகிறது.

சிந்தனையாளர்கள்.

சிந்தனையென்றால், ஒரு பெரிய விஞ்ஞானக் கருவியைக்கண்டு படிப்பதுமாத்திரம் சிந்தனையல்ல. அஃதுண்மையாயின், விஞ்ஞா

ஷிகளை மாத்திரமே சிந்தனையாளர்கள் என்று ஒப்புக்கொள்ள வேண்டும். இதோ! கிரேக்க நாட்டுத்தத்துவஞானி சாக்ரடீஸ், அரசியல் ஞானி ப்ளாட்டோ, தர்க்க ஞானி அரிஸ்டாட்டல், அமெரிக்க நாட்டு அடிமைத் தளைகளை உடைத்தெறிந்த ஆப்ரகாம்லிங்கன், சீனப் பேரறிஞர்கள் கன்பூஷியஸ், சன்யாட்சன், மதப்புரட்சி செய்த மார்ட்டின்லூதர், சமதரும வீரர் காரல்மார்க்ஸ், ஐயர் லாந்தின் விடுதலை வீரர் டிவேலரா, ஐரோப்பாவின் நோயாளி துருக்கி என்று தூற்றப்பட்ட நாட்டை, வல்லரசு துருக்கியாக்கிய முஸ்தபா கமால் பாட்சா, கிறிஸ்துமதக் கொள்கையில் சீர்திருத்தம் செய்ய எண்ணியதால், சினம்மிகுந்த போப்பாண்டவரால் தீயில் தள்ளப்பட்டு மாண்ட தொழிலாளி ஜான்பாட்லி, ஜப்பான் நாட்டுக்குத் தேவையான அரசியல் சீர்திருத்தங்கள் செய்துதந்து, அதை மெய்ஜீ அல்லது விளக்கமுள்ள ஆட்சி என்றழைக்கப் பாடுபட்ட, முட்சுஹிடோ, இந்திய உபகண்டத்துக்கு விடுதலை தேடித் தந்த காந்தியார், இவர்கள் அனைவரும் சிந்தனையாளர்களே.

ஒன்றை நினைத்து, நினைத்த இடத்திலேயே விட்டுவிடாமல் அதைப்பற்றி ஆராய்ந்து, அதற்கோர் திட்டம் வகுத்து, அதற்காக அல்லும் பகலும் ஓயாதுழைத்தவர்கள், உழைக்க எண்ணங்கொள்வோர், அனைவரும் சிந்தனையிற் சிறந்தவர்கள். நமது வணக்கத்துக் குரியவர்களேயாவார்கள்.

சிந்திக்காமல் நேர்ந்த சீரழிவு.

ஒரு பொறுப்புள்ளவன் சிந்திக்காமல், அவசர எண்ணத்தால் செய்த குற்றத்தால், எத்தனை தலைகள் உருண்டிருக்கின்றன? எத்தனைக் கோட்டைகள் தகர்த்தெறியப்பட்டன? எத்தனை நாடுகளுடைய எல்லைக் கோடுகள் மாற்றிக் கிழிக்கப்பட்டன? எத்தனை விதக் கொடிகள் மாறி மாறிப்பறந்தன? எத்தனைச் சட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டன? எவ்வளவு நாகரிகங்கள் தலைகீழாக மாறிவிட்டன? ஒரே அரியாசனம் எத்தனை நாட்டு மன்னர்கள் வீற்றிருக்க இடமளித்தது? இறந்தகால அந்நிகழ்ச்சிகளைக் காலக் கண்ணாடி கொண்டு பார்ப்போம்.

அமெரிக்காவில்.

அமெரிக்க நாட்டில், ஆங்கிலேயர் கை ஓங்குவதைத் தடுக்க மண்ரோ அறிக்கை ஏற்பட்டது. அவ்வறிக்கையில் "அமெரிக்கா அமெரிக்கர்களுடையதுதான். அமெரிக்கா கண்டங்களிலிருப் போர் சுதந்திரம் பெற்றவர்கள். ஐரோப்பாவின் ஆதிக்கத்திற்கு அமெரிக்கர் எவரும் கட்டுப்பட்டவர்களல்ல. ஐரோப்பியர் யாரும் அமெரிக்கக் கண்டங்களில் குடியேறுதல் கூடாது. ஐரோப்பிய அரசியல் திட்டம் அமெரிக்கரின் அரசியல் திட்டத்திற்கு முற்றி லும் வேறானது. ஆகவே ஐரோப்பிய அரசியல் திட்டத்தை, அமெரிக்காவின் எந்தபாகத்திலாவது புகுத்த முயல்வது, இந்த நாட் டின் அமைதிக்கும், பாதுகாப்புக்கும் அபாயத்தை விளைவிப்ப தாகும்." என்று பொறிக்கப்பட்டிருந்தது. நாட்டுப் பற்றும், உரிமைவேட்கையும்கொண்ட இந்த அறிக்கையைப்பற்றி, சிந்தித்த வர்கள் யாரும் எதிர்க்கத் துணியவில்லை. ஆனால் சிந்தனையற்ற பிரான்சு மன்னன் மூன்றும் நெப்போலியன், அவ்வறிக்கைக்கு விரோதமாக 1860-ல் மெக்ஸிகோவைப் பிடித்துக் கொண்டான். அந்தப்போரில் எவ்வளவு சேனைகள் மடிந்திருக்கும்? —

ஜப்பானில்.

19-ம் நூற்றாண்டின் இடைக்காலம் வரையில், வெளிநாட்டாரு டன் எவ்விதத் தொடர்பும் வைத்துக் கொள்ளவில்லை ஜப்பானியர். 1853-ல் *M. C.* பெரி என்பவனும், அவனுக்குப்பின் பிரிட்டிஷாரும் டச்சுக்காரர்கள், பிரான்சுக்காரர்கள், ருஷ்யர்கள், ஆகியோர் கள், அச்சமயத்தில் ஜப்பானில் செல்வாக்கோடிருந்த ஷோகன் கூட்டத்தாருடன் வாணிப ஒப்பந்தம் செய்துகொண்டு, உள்ளே நுழைந்தார்கள். இதையறிந்த அதன் பிற்கால 1867—1912-ம் ஆண்டில் அரசுசெலுத்திய, முட்சுஹிட்டோ என்ற ஜப்பானிய மிக் கோடாவே புரட்சியை ஏற்படுத்தி, ஜப்பானை எல்லா வகையாலும் சீர்தூக்கினார். அதனால் அந்தச் சிந்தனையாளன் ஆட்சியை, இன் றும் "மெய்ஜி." அல்லது "விளக்கமுள்ள ஆட்சி" என்றழைப் பதைச் சரித்திரத்தில் படிக்கின்றோம்.

சீனவில்.

சீன நாட்டில், பிரிட்டானியர் அபினியை இறக்குமதி செய்து வியாபாரம் செய்ததன் பயனுக, சீனமக்கள் உடல்நலங் குன்றியதோடு, பொருள்வளமும் குன்றியது. அதைத்தடுக்க எண்ணுவது, அந்த நாட்டுமக்கள் உரிமை என்று அந்தக்கால பேராசைப் பிரித்தானியம் எண்ணியதா? அபினிப்போர் என்ற பெரும் போர் மூண்டது. அதன் முடிவென்ன? சீனர்கள் தோற்றனர். வென்ற வெள்ளையர்க்கும் அவர்களைச்சார்ந்த ஐரோப்பிய வாணிபக்கொள்ளைக் கூட்டத்தினருக்கும், காண்டன், ஷாங்கே, அமாய், நிங்போ, பூசௌ என்ற ஐந்து துறைமுகங்கள் திறந்துவிடப்பட்டன. அந்த அதிர்ச்சி, இன்னும் சீன நாட்டை விட்டபாடில்லை!

ரஷிய மாறுதல்.

கி.பி. 1480-க்கு முன், முன்னூறு ஆண்டுகள் மாஸ்கோ, மங்கோலியாவுக்கு அடங்கிய சிற்றரசு நாடாக இருந்தது. பிறகு ஜார் என்ற பட்டம் பெற்ற, பயங்கர ஐவான் காலத்தில், 1480-ல் மாஸ்கோ சுதந்திரமடைந்தது. நார்மென்ரூரிக் என்பவருடைய சந்ததியைச் சேர்ந்தவர்கள் ஜார் குடும்பத்தார்கள். அக்குடும்பத்தின் சந்ததிகள் அற்றதால், மக்கள்கூடி, பழைய அரசகுடும்பத்தைச் சார்ந்த மைகல்ராமனே என்பவரை, 1613-ல் ஜாராகத் தேர்ந்தெடுத்தார்கள். அதன்பிறகு 1680—1729-வரை, ஆட்சி செலுத்தியவர் ஜார்பீடர். அவர் மக்களுடைய உடைகளைத் திருத்தியமைத்தார். நீண்ட தாடிவைத்துக்கொள்வதைத் தடுத்தார். அப்படி வைத்துக்கொள்ள விருப்பமுள்ளவர்களுக்கு வரி விதித்தார். அந்தப்புறத்தில், அந்தக்காலத்தில், அரிவையர்களை அடைத்து வைத்திருந்த பழக்கத்தை அகற்றி, முகமூடியின்றி வெளியில் வர அனுமதித்தார். ஆண்களுடன் நடனமாடவும், கேளிக்கை விளையாட்டுக்களில் கலந்துகொள்ளவும் செய்தார். பழைய ருஷ்ய காலண்டரை எடுத்துவிட்டு, புதிய ஜூலியன் காலண்டரைப் பழக்கத்திற்குக் கொண்டுவந்தார். அவசியமற்ற எழுத்துக்களை நீக்கி, எழுத்துக்களைச்சுருக்கினர். கனிச்சுரங்கங்களையும், கால்வாய்களையும் வெட்டினர்.

சாலைகளை அமைத்தார். ஆட்டுப்பண்ணை, சில்க், கம்பளித்தொழில்களை விருத்தி செய்தார். போலீஸ், தபால், முறைகளைச் சீர்திருத்தம் செய்தார். மேல்நாட்டு முறைப்படி, சட்டங்களைத் திருத்தியமைத்தார்! வைத்தியக்கல்லூரி, இஞ்சினீயர்கலாசாலை, கடற்படைப்பயிற்சிப்பள்ளி இவைகளை வைத்தார். ஜெர்மன் முறைப்படி இராணுவத்தை ஒழுங்கு படுத்தினர். வீரர்களுக்குத்தனியுடையுடன், ஐரோப்பியப் போராயுதங்களை உபயோகிக்கப் பழக்கம் செய்து வைத்தார். ஹாலந்து முறைப்படி ஒரு போர்க்கப்பலைக் கட்டினர்.

அப்படியிருந்தும், அந்த ஆட்சிமுறை, பிற்காலச்சிந்தனையாளர்களாகிய காரல்மார்க்ஸ், லெனின், ஸ்டாலின், ட்ராட்ஸ்கி போன்றூர்க்குப் பிடிக்காமல், புரட்சிகரமான மாறுதலையே செய்து முடிந்துவிட்டார்கள். ஆகவே சிந்தனை, சிந்திக்கும் மனிதர்கள், அவர்கள் வாழும் நாட்டின் தட்ப வெப்பநிலை, அவர்களுக்குக் கிடைக்கும் பொருள்கள், அவ்வப்போது ஏற்படும் கால மாறுதல், ஆகியவைகளை யொட்டியே சிறப்படைகின்றது.

காலத்துக்கேற்ற சிந்தனை.

கல்லோடு கல் தேய்த்துக் கனல்கண்ட கற்காலமனிதன் சிந்தனையும், கைப்பித்தானை அழுத்திக் கனல்காணும் இக்காலச்சிந்தனையும் ஒன்றெனக் கொள்வதாகுமா என்கின்றனர் பல்லோர். அந்தக்காலத்தில் அந்தமுறை ஆச்சரியத்தையும், இந்தக்காலத்தில் இந்தமுறை வியப்பையும் தருவதோடு, விரிவடைந்துமிருக்கின்றது, அவ்வளவுதான். ஒரு காலத்தில் பார்க்க முடியாத வெளிக்கண்டங்களைப்பார்ப்பதும், அதில் ஒவ்வோர் விநாடியில் நடக்கும் வேலைகளை, ஒரு சிறியபெட்டியின் மூலம் தெரிந்துக்கொள்வதும் மனிதன் சிந்தனையாலல்லவா ? எந்தெந்தநாட்டு அரசாங்கங்கள், அந்தந்த நாட்டு மக்களுக்குச் சிந்திக்கும் உரிமையைப்பரிபூரணமாக வழங்கிய தோடல்லாமல், அவர்களுக்கு அரசாங்க நிதியிலிருந்து, போதிய தொகையை நன்கொடையாக அளித்ததோ, அங்கெல்லாம் அறிவு அரியாசனத்தில் அமர்ந்து ஆட்சி செய்திருக்கின்றது.

நமது நிலை என்ன ?

ஆனால் இங்கு என்ன நிலை? ஒருவன், சிந்திக்கத் தொடங்கி விட்டான் என்று தெரிந்து விட்டால் போதும், அவன் சமூகத்தின் நோயாளி என்கிறான் மதவாதி. புரட்சிக்காரன் என்கிறான் அதிகாரி. பணப்பேழையை அரிக்கவந்தசெல்லு என்கிறான் முதலாளி. தலைவிதியை எண்ணாத தறுதலை என்கிறான் பணக்காரன். புத்தியில்லாதவன், புண்ணியத்தை நாடாதவன், என்கிறான் புரோகிதன். சம்பத்தை மதிக்காத சண்டாளன் என்கிறான் நீதிபதி. அற்பாயுசுக்காரன் என்கிறான் ஆண்டவன் பிரதிநிதி. அயோக்கியப் பயல் என்கிறான் ஆசிரியன். தடியன் என்கிறான் தந்தை. தகாது என்கிறாள் தாய். நமக்கேன் என்கிறான் நண்பன். உதவாக்கறை என்கிறான் உடன்பிறந்தான். உறுமுகிறார்கள் ஊரார். அவன் என்ன செய்ய முடியும்? மின்சார ஒளிக்குமுன் அவன் காண்பது குத்துவிளக்கு வெளிச்சந்தானே! அவன் சாந்தியடையக் கிடைப்பது பழைய மன்னர்கள் சரித்திரந்தானே! அதே கல்லறை முன், இன்று என்ன இடிமுழக்கம் எழும்புகின்றன என்று அவன் எண்ணத்துணிந்தாலும், சமுதாயத்திரை, இடையே தொங்குகின்றதே! ஆம்! இறந்த மன்னர்கள் இன்றிருந்தால், அவர்களை இப்படித்தான் கேட்கத் தோன்றும்.

புத்தர்பெருமானே !

புத்தர்பெருமானே! இதோபாரும் எமது பாசறை. சீர்திருத்த முகாம். ஏன் (?) என்ற கேள்வியின் நீதி மன்றம். அன்று நீங்கள், அரசபீடம், அழகான மனைவி, அன்புள்ள குழந்தை, அதிகாரம், அவ்வளவையும் விட்டு விட்டுக்காட்டில் நடந்து, கானலில் காய்ந்து, வெப்பத்தில் வெந்து, வெந்தழலில் நொந்து, புயலில் மோதி, பசியால் வாடி, மழையால் நனைந்து, பனியால் பதுங்கி, குளிரால் நடுங்கி, கோர விலங்கினங்களால் துன்பப்பட்டுப் பஞ்ச சீலத்தை கற்றீர்களல்லவா? உங்கள் பஞ்ச சீலமெனும் ஐந்து ஒழுக்கங்களையும், ஞாலமறியாமுன் ஓலமிட்டு அழுது, வேற்று நாட்டுக்கனுப்பினீரன்றோ வஞ்சகப்புலிகள்,! தாங்கள் பெற்றிருந்ததைப்போல் எங்க

ளிடம் நால்வகைச் சேனையில்லை. கூராயுதமும், குத்தீட்டியும், கொடுவாளும் இல்லை. "பகையைப் பகையால் வெல்ல முடியாது, அன்பால் அனைத்தையும் வெல்லலாம்" என்றீர். புலியிடம் அன்பு காட்டுவது, நாம் இறப்புக்குத்தயாரான பிறகல்லவா? புலியின்மேலுள்ள கோடுகளாவது, அதன் தோலோடு ஒட்டியவை. இவர்கள் ஒவ்வொரு நாளும் கங்கை, காவேரியாற்றங்கரைகளில், காலையிலிடும் வெண்கோடுகளை, வேண்டும்போது கலைக்கலாம்! பார்வையோ புலியின் பார்வைக்கும் மிஞ்சி விடும். அன்னாள் நீர் அயர்ந்தீர். புலியிடம் காட்டிய பரிவால், புலி உம்மைப்பழி தீர்த்துக் கொண்டது. புத்தர்பிரானே! வருந்தாதீர். உமது கொள்கையின் வழி வந்தோர், இன்னும் குவலயத்தில் உயிரோடிருக்கின்றூர்கள், சாகவில்லை!

அர்ஷ மன்னவரே!

மகதசாம்ராஜ்யத்தின் மணிமுடி மன்னனே! மகதத்தின் தன்மைகளை ஆராய, அன்னாள் அறிஞர் குழாம் நடத்திய மத ஆராய்ச்சியில், புத்தமதக்கொள்கைகள் சிறந்ததென முடிவுகண்ட மாநாட்டின் தலைமை தாங்கிய, அஞ்சா நெஞ்சம் படைத்த அறிஞனே! அன்று அந்த மாநாட்டுமுடிவுக்குப்பின் 500 வேதியர்கள் உம்மைக் கொல்ல முயன்றூர்களல்லவா? அவர்கள்தானே அகில உலக மாணவர்களைக் கற்றோர்களாக்கிய, நளாந்தா சர்வகலாசாலைக்குத் தீயிட்ட தில்லர்கள்? அவர்கள் உமது கடைசீ மூச்சைக் காண முயன்றபோது, "எடுவாளை!" என்றீர். அடுத்த வினாடியே அன்பர் புத்தர் போதித்த பொன்மொழியின் பதிப்பகமானீர். நஞ்சே உருவான பஞ்சைகளுக்கு அஞ்சலியளித்தீர், நீர்கொண்ட பஞ்சசீலத்தால். தேளிடம் தாராளசிந்தை காட்டினீர். கொட்ட முயன்றது. பாம்பினிடம் பரிதாபம் காட்டினீர்! கொஞ்சமும் தயக்க மின்றி, அது தன்னிடமுள்ள நஞ்சைத் தாராளமாகத் தந்தது வழக்கம்போல்! நலிந்தீர். பகைவரிடம் பரிதாபம் காட்டினீர். குகைவாழ் புலியெனக் கொக்கரித்தனர். ஈகையைப்போற்றும் வரை, பகை நம்மைக் கொடுமைகள் நிறைந்த குகையில் தள்ளாது என எண்ணினீர். அந்த முடிவு அந்திப்பொழுதாயிற்று. ஆன

லும், அன்று நீர் கொண்ட எண்ணத்தின் எதிரொலிபோல், இன்றும் இங்கு, எண்ணற்ற இளைஞர்கள் உண்டு; இறக்கவில்லை, இதயம் சாந்தியடைக !

அசோகப் பெருமன்னனே !

சோகமிலாச் செம்மலே! வடநாடு முழுதாண்ட வாகை வீரா! துன்பம் மனித இனத்திற்கேயன்றி, மிருக இனத்திற்கும் உண்டெனப்பல மருத்துவச்சாலைகளை அமைத்து, அதன் கொடு நோய் தீர்த்த தார்வேந்தனே! கற்றூண்களைப் பல இடங்களில் எழுப்பி, அதில் புத்தர் பொன்மொழிகளைச்செதுக்கி, செகத்திற்குக்காட்டிய சுத்த வீரனே! கலிங்கப்போரில் கருந்தூள் செந்தூள் எழும்ப, வாள்மின்ன, குதிரைக் குளம்புகளுக்கடியில் சிக்கி உடைந்த மண்டையோடு, உதிரம் கொட்டக்கிடந்த பிணங்களைப் பார்த்துக்கண்களில் நீர்மல்கி, பஞ்சசீலத்தை மேற்கொண்ட பண்பாளா! நன்மைகளைச் தீமையால் மறைக்கும் மாபாதகச்செயல்களை, நீர்காணு முன்னம் நீள் உலகைவிட்டீர். உங்கள் உள்ளத்தில் கருணையிருந்த அளவு, வாளில் கூர்மை இருந்ததில்லை. மக்களிடையே நிற பேதம் இருக்கக் கூடாதென வற்புறுத்த மறந்தீர். அதனால் வடவர் கொழுத்தார். வாழ்க்கையில் பழுத்தார்கள். இன்று அழுத்தமாக உட்கார்ந்து கொண்டு, ஆரியமே அகில உலக மக்களை, அந்த உலகத்தில் சேர்க்கும் ஆகாயக் கப்பல் என்கின்றனர். 20ம் நூற்றுண்டின் இறுதியில், எல்லா இனமும் தனக்கென நாடு கேட்கும்போது, இந்த மரத்தடி வாழ்மறையோர்கள், எங்கே செல்வதென ஏக்கத்தீர்மானம் நிறைவேற்ற மாநாடு கூட்டுகின்றனர். மனம் புழுங்கிப் பேசுகின்றனர்.

இதோ பாரும், உமதுபெயரால் சிங்கக்குறி, சகடச்சின்னம்! உமது வாள், கொள்கை, அவ்வளவும் அயல் நாடுகளுக்கனுப்பிய அற்பர்களை, இன்று அபயஸ்தம் கேட்கும் அளவுக்கு, ஆயுதமில்லாமல்—அரசியல் அதிகாரமில்லாமல்—அறிவால் வென்றிருக்கின்றோம் பாரும்!

நவநந்தர்களே !

நவமணிகள் போன்ற நவநந்தர்களே ! நீங்கள் அடையவேண்டிய அரசுரிமையைச் சந்திரகுப்தனுக்கு சூழ்ச்சிமூலம் பெற்றுத் தந்த, சூழ்ச்சியே உருவான சாணக்கியன் உடலை வளர்த்த உத்தமர்களே! "எம்மைக்கீழே இழுத்துத்தள்ளிய உங்களை, உங்கள் அரியாசனத்திலிருந்து கீழே தள்ளும்வரை, என் குடுமியை முடிப்பதில்லை'' எனச்சூளுரைத்த சாணக்கியனை, நினைவுபடுத்திக்கொள்ளுங்கள். அக்கொடியோன் வழிவந்தோர் அனேகர், திராவிடர் பெறவேண்டிய அரசுரிமையை ஆரியர்க்காக்கித் தந்து, சூளுரை முடிந்ததால் குடுமியை முடித்திருக்கின்றனர்கள். ஆனாலும் முடியவில்லை! இப்போதுதான் பலமான போர் தொடங்கி இருக்கின்றது. இனி உதட்டின் புன்முறுவல் மூலமோ, கட்டைகளைக்கொளுத்திய கடும்புகையின் மூலமோ, ஏமாற்ற முடியாத நிலையில் இடர்ப்படுகின்றனர்கள், அப்பப்ப! உங்கள் வீரப்பிரதாபத்தை எண்ணும்போது, நாங்கள் எம்மாத்திரம் என எண்ணினோம். ஆனாலும் அறிவைத்துணைகொண்டோம், அவர்கள் ஆயுதத்தைத் தேடுகின்றனர்கள். அந்த ஆயுதத்தைச் செப்பனிட்டுத்தரும் பாட்டாளியும், தன்னைத் திராவிடன் என உணர்ந்து கொண்டான். ஆகவே ஆயுதங்களை அவன் செப்பனிட்டுத்தர மாட்டான். கேட்டதைத் தரும் கற்பகத்தருவும், காமதேனுவும் உங்களிடம் இருப்பதால், அவற்றிடமே எல்லாவற்றையும் பெற்றுக்கொள்ளுங்கள் என்று, பகுத்தறிவுப் பதிலைச்சொல்லி விடுவான். அந்த நாள் இன்றே, அதைக்காண நாங்கள் கொண்ட ஆயுதம், அறிவு ஒன்றே என்று நீதியின்பேரால் தங்களுக்குச் சொல்லுகிறோம்.

வீர சிவாஜியே !

தோர்ண, புரந்தர், ராஜகிரி, கல்யாண் என்ற மகத்தான கற்கோட்டைகளைத் தகர்த்தெறிந்த வீர சிவாஜியே! உங்கள் மனக்கோட்டையைத் தகர்த்தெறிந்ததே ஆரியம். அந்த ஆரியத்தின் இனக்கோட்டையைத் தகர்த்தெறியத் தவறினீர்! மராட்டிய மாவீரனே ! அதன்விளைவு என்ன ?

ARCHIVES LIBRARY
111767

ஆயிரம் பொற்காசுகளை கங்குபட்டருக்குத்தானமாக வழங்கி, உமது சூத்திரப் பட்டத்தைப் போக்கிக்கொண்ட பின்புதான், உம்மை உமது அரியாசனம் ஏற்றுக்கொண்டது! நீர் சுழற்றிய வாள், உமது குதிரைகள் மிதித்த தலைகளிலிருந்து பீறிட்டுவந்த ரத்தம், உங்கள் போர்வீரர்கள் தேடித்தந்த வெற்றி, இவ்வளவையும் மறந்து, மறையோன் உமக்கு மணிமுடிதர மறுத்தான். அன்று வது "இவன்யார் பேதை" என எண்ணினீரா? உமக்கிருந்த மத போதையில், மனித சமூதாயத்தின் மானமற்று, மறையோன் காலில் விழுந்த ஞான்றே, உமது வீரத்திற்கு ஓர் களங்கம் ஏற்பட்டது. எள்ளி நகையாடியது உலகம். அதோடு விட்டனவா வேதங்கள் உம்மை? சண்டையிலேபல நிரபராதிகளைக் கொன்ற பாவத்தைப்போக்க, 4000—ஆரியக் குடும்பங்களுக்கு, ராஜகோட்டையில் நான்கு மாதங்கள் வரையில் அறுசுவை யுண்டியளிக்கப் பணித்தனர். அதையும் மனமுவந்து செய்தீர். அதோடு விட்டிருந்தாலும் உமது ஆட்சியின் பின் சந்ததிகள் தலையெடுத்திருக்கும். உமது நிறைக்குப் பொன்னும் வெள்ளியும் தானம் வழங்கச்செய்தது. அதையும் அட்டியின்றி செய்தீர். அதன் காரணமாக உமது பணப்பெட்டியே உம்மைச் சுடலைக்குக் கொண்டுபோகும் பிணப்பெட்டியாக மாறியது!

முடிவில் உமது ஆட்சி, விஸ்வநாத தாசுக்குப் போய்விட்டது. காரணமென்ன? உமது வாள் சுற்றிய அளவு, மனம் சுழலவில்லை. கரடு முரடான பாறைகளையும், உமது காலாட்படைகள் கடந்து சென்ற அளவு, உமது கருத்துச் செல்லவில்லை. போரில் குதிரைகளோடு குதிரைகளும், யானைகளோடு யானைகளும் முட்டி, கருந்தூள் செந்தூள் எழும்பிய அளவுக்கு, உமது சிந்தனை எழவில்லை. உமது வெற்றியைக் கண்டு, பொன்னும் மணியும் தானம் வாங்கிய ஆரியம், உமது வீழ்ச்சியைக் கண்டு ரத்தக் கண்ணீர் வடித்திருக்க வேண்டும். அதற்கு மாறாக, அது புன்னகை பூரித்திருந்தது! அந்த நிகழ்ச்சியே, உங்கள் பின் உலகத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகவும், அறவுரையாகவும், அபாயச் சங்காகவும் முடிந்தது. பலர் மடிந்த பிறகு, ஒருவருடைய வெற்றி என்பதைப் போல், உங்களைப்போன்ற பல மன்னர்கள் வீழ்ச்சியல்லவா விழிப்புக்

குக் காரணமாகின்றது. உங்களுக்கு ஏற்பட்ட வீழ்ச்சிபோல் யாருக்கும் ஏற்படாதிருக்குமாக! சிந்திக்காததன் குற்றத்தால், வாழ்க்கை சோகச் சுழலின் துரும்பென அமையும் என்பதே, நீங்கள் எங்களுக்குக் காட்டிய படிப்பினையல்லவா?

பொதுவாழ்வும் சிந்தனையும்.

அந்தச்சிந்தனையும் தன்னலங் கருதாதிருந்தால், சாலச்சிறந்ததாகும். தன்னலத்தார் சிந்தனை, கேணியிலிருக்கும் மீனைத்தூக்கிக் கடலில் எறிந்தாலும், கேணியளவே சுற்றுவதைப்போல், பொது நலத்திற்குப் பயன்படுவதில்லை. ஏனெனில், ஒரு எல்லைக்குட்பட்டே சிந்தித்து, அதன் முடிவால் பெறும் வசதியை, நேரடியாகத் தன் குடும்பத்திற்கே பயன்படுத்த வேண்டிய நிலையிலுள்ளாரின் எண்ணம், ஒரு குறிக்கோள் முடிந்ததும் முடிந்துவிடும்.

ஆனால் எண்ணக்கடலில், சிந்தனை அலைகள் மோத, மோத, பெருகிக்கொண்டே இருக்குமென்பதை உலகுக்கு எடுத்துக்காட்டியவர்கள் ஒரு சிலரே. மற்றவர்கள் கரையில் மோதிய அலைகள், அதோடு முடிந்துவிட்டது என்று எண்ணுபவர்களேயாவர். மீண்டும் அதே அலை, கொஞ்ச தூரத்தில் மேலே கிளம்பி, கரைநோக்கி வருகின்றது, என்ற உண்மையைக் காண்பவர்தான், சிந்தனைக்கு ஒரு எல்லையோ, முடிவோ, இல்லை என்ற முடிவுக்கு வருவார்கள். ஆனால் சிந்தனை என்பதை யார் யார் எந்தெந்த கண் கொண்டு பார்க்கிறார்களோ, யார் யார் எந்தெந்த கருத்துக்கொண்டு நினைப்பார்களோ, அதைப்போலவேதான் பிரதிபலிக்கும்.

சிந்தனையின் விசித்திரம்.

எப்படியெனில், தாமஸ் ஆல்வாய் எடிசன் ஒரு காட்டுக்குப் போயிருந்த பொழுது, அங்கே ஒரு செடியில் இருந்த இலையைப் பறித்துக் கிழித்தான். அதில் ஆடு கத்தும் சத்தம் கேட்டது. அந்த இலைக்குள் ஒலி புகுந்த காரணமென்ன வென்று சிந்தித்தான். அதன் வாயிலாகப் பல உண்மைகளைக் கண்டறிந்தான். ஈதர்

என்று சொல்லப்படும் அணுவுக்கணு, அகில உலக வானவெளியெல்லாம் பரவியிருப்பதாலும், அது எந்தஓசையையும் தன்னுள் இழுத்து, அதன்பக்கத்தில் இருக்கும் அணுவுக்கணுவினிடம்தந்து, அந்த ஓசையை எவ்வளவு தூரமானாலும் கொண்டுபோய்ச் சேர்க்கலாம் என்று அவன் நினைத்ததன் விளைவே, இன்று நாம் கேட்கும் ஒலியலைச்செய்தி! அவனுக்கு முன் பலர் கேட்டிருப்பார்கள் அந்த இலையில் எழும்பிய ஆட்டின் ஓசையை. ஆனால், அவர்கள் சிந்தித்தார்களா?

சிந்தனையில் விளைந்த "ரேடர்."

ரேடரைக் கண்டுபிடித்த அறிஞனும், வெளவாலைப் பார்த்த பிறகு, இது இவ்வளவு வேகமாக, ஆயிரக்கால் மண்டபத்தில் தூண்களில் முட்டிக்கொள்ளாமல், எப்படிச் செல்லுகின்றது என்று சிந்தித்தான். சிந்தனையின் முடிவாக, ரேடரைக் கண்டுபிடிக்க முடிந்தது. அவனுக்கு முந்தியவர்களும், வெளவாலைப் பார்த்திருப்பார்கள். ஆனல் யாராவது அதைப்பற்றிச் சிந்தித்திருப்பார்களா? இல்லை.

ஆகாய விமானம்.

அதேபோல், ஆகாயத்தில் பறந்து கொண்டிருக்கும் வல்லூறைப் பார்த்து, வைகுண்ட வாசனின் வர்கனமெனத் தாடையில் அறைந்துக்கொள்ளும் அடியார்களைக் காட்டிலும், அதன் நுட்பத்தைக்கொண்டு, ஆகாய விமானத்தைக் கண்டுபிடித்த விஞ்ஞானியின் சிந்தனை சிறந்ததல்லவா?

மின்சாரம்.

பல நீர்வீழ்ச்சிகளைப் பார்த்து, பாவம் போக்கும் புண்ணிய தீர்த்தம் எனக் குளிப்பதற்காகக் கும்பல் கூடினார்களே! அதில் உலக ஜோதிக்கான மின்சாரம் இருப்பதாகக் கண்டு, அதை நாட்டுக்குப் பயன்படுத்திய விஞ்ஞானி, இந்த மோட்சலோகப் பேரா

னைச் சுயநல மக்களைவிட மேலானவனல்லவா? தன் அறிவின் துணை கொண்டு, அகில உலகிற்கே வெளிச்சத்தைத் தந்த, இந்த அறிஞன் சிந்தனைக் கடலல்லவா?

கடல்வழி கண்டனர்.

நிலத்தின் தன்மையும், இழுக்கும் சக்தியும் கண்டு பிடித்த கலீலியோவின் ஆராய்ச்சிக்குப் பிறகுதான், கடற்பிரயாணிகளுக்கு வசதி ஏற்பட்டது. உலகம் உருண்டை என்றுகண்டு பிடித்த பிறகுதான், கடலுக்கு ஓர் கரையிருக்க வேண்டுமென்ற நினைப்பு ஏற்பட்டது. கடலுக்குக் கரை இருக்கமுடியும் என்ற எண்ணம் ஒன்று ஏற்பட்ட பிறகுதான், 400–ஆண்டுகட்கு முன்பு, புது உலகமெனும் அமெரிக்காவைக் கண்டுபிடிக்க வசதியாயிருந்தது. மார்க்கபோலோ, கீழ்நாடுகளுக்குக் கடல் வழி வகுக்கவும் முடிந்தது.

8000-அடிகளுக்கு மேல் காற்று இல்லையெனத் தெரிந்தும், மேல் நோக்கிப் பறக்கும் சக்தி கொண்டு, செவ்வாய் மண்டலத்தையடைந்து, அங்கே மனிதர்கள் வசிக்க இயலும் என்ற முடிவு ஏற்பட்டது. இவையெல்லாம் நம்மாலாகுங் காரியமா என்ருல், அறிவுக் கண்கள் திறப்பதெங்கே? அதிசயப் பொருள்களைக் காண்பதெப்போ?

நெடுந்தூரத்தில் இருந்த உலகத்தை, மனிதமுயற்சி ஒரு சிறிய ரேடியோ பெட்டிக்குள் அடக்கி விடவில்லையா? காலை காபி சென்னையில், பகல் உணவு டெல்லியில், மாலைகாபி மத்தியதரைக் கடலில், இரவு உணவு லண்டனில்! எவ்வளவு சுருங்கி விட்டது உலகம்? உண்மையாகவே உலகம் சுருங்கிவிட்டதா? இல்லை. மனிதனின் சிந்தனை கடல்போலாய் விட்டதால், அதில் மிதக்கும் ஓடமாய்விட்டது உலகம். அவ்வளவுதான்.

அறிவுக்கு எல்லையேது?

பெரும்பாலும், சிந்தனையாளர்கள் ஏன் அறிவுக்கு மேற்பட்ட ஒன்றிருப்பதாக ஒப்புக்கொள்வதில்லை யென்ருல், அறிவுக்கு

மேற்பட்ட ஒன்றிருப்பதாக ஒப்புக்கொள்வதானல், அறிவுக்கு எல்லை வகுக்கவேண்டி வரும் அல்லவா? அந்த முடிவுக்கு வந்தால், எந்த எல்லை வரையிலும் மனித அறிவு? எந்த எல்லை வரை அதற்கப்பாற்பட்ட அறிவு? என்ற வினை தானுக எழும்.

தெய்வத்தால் எல்லாம் ஆகும் எனப் பொதுமறை தந்த பொய்யாப் பெருந்தகை வள்ளுவரும் ஒப்புக்கொள்ளவே இல்லை. "தெய்வத்தாலாகா தெனினும் முயற்சிதன் மெய்வருந்தக் கூலி தரும்" என்ருர். ஆகவே மெய்வருந்திய முயற்சியால் ஆகாத தொன்றில்லை என்பதுதான் அவரது கருத்து.

செயலற்ற தெய்வம்!

மேலும், தெய்வம் சாதித்தவைதாம் என்ன? தெய்வத்தை வைத்து, அதன்பேரால் பல புராணங்களை எழுதி, சதா மாரடித்துக் கொண்டு, நரிக்கூட்டம் ஒன்று தந்திரமாகப் பிழைக்க ஏற்படுத்திக்கொண்ட சாதனச் சின்னமாக விளங்குகின்றதே தவிர வேறென்ன சாதித்தது? வங்காளப் பஞ்சத்தைப் போக்கியதா? வந்த பல பிணிகளை, பூகம்பங்களை, கொள்ளைநோயைத் தடுத்ததா? கொடுமையாளர்களைத் தண்டித்ததா? குஷ்டரோகிகளின் துயரைப் போக்கியதா? கோயில்களில் நகைகளைத் திருடிய திருடர்களைத்தான் கண்டுபிடித்ததா? குள்ளமனம் படைத்த, கொலைகார கோட்சேயை, நல்லவனுகப் பிறக்கச் செய்ததா? அறுசுவையோடு, ஆதித்தன் தோன்றிய நேரம் முதல், அர்த்தராத்திரி வரையிலும் ஓயாது உண்டு, அம்சதூளிகா மஞ்சத்தில் ஆரோகணித்தது தவிர, அடியார்களின் அருமையான பிரபந்தங்களின் மூலம், அறிவுள்ளவர்களை அடிமைகளாக்கியது தவிர, வேறென்ன செய்தது தெய்வம்?

காந்தியாரைக் காத்ததா?

போகட்டும், சதா அதையே கும்பிட்டுக்கொண்டு, அதற்காகவே வாழ்ந்து, அதையே துதித்து, துதிக்கும்படி மக்களையும்

ஏவி, பக்தர்கள் மனதில் மாத்திரமல்லாமல், பாராளுமன்றம்வரை ராம நாமத்தை அரியாசனமேற்றி, அந்திநேரத்தில், அதன் தொழுகைக்காகவே வந்த காந்தியாரைத்தான் காப்பாற்றியதா?

ஆராய்ந்து, ஆராய்ந்து, அயர்ந்துபோனவர்கள்: ஆண்டவன் செயல் என்ற வார்த்தையைச் சொல்லிக் கொண்டார்கள். அது அவர்கள் அடைந்த மனவேதனைக்குக் கூலி போலும்! ஆனால் சிந்தையைச்செலவிட்டுச் செயலில் வெற்றிபெற்ற யாரும், அறிவுக்கு அப்பாற்பட்ட ஒன்றைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. ஏனெனில் அறிவுக்கோட்டைக்கு, தலைவிதி என்ற சொல்லே கபாடம். தலைவிதி என்ற கபாடக்கதவுகளைத் திறந்துவிட்டால், அறிவுக் கோட்டையைக் காணலாம்.

எதற்கும் கடவுள்!

அந்த நிலை ஏற்படாதவரை, பசிக்குக் கத்தும் பல்லியையும், எலியைத் துரத்திக்கொண்டு ஓடும் பூனையையும், ஏதோ வேலையாகப் போய்க்கொண்டிருக்கும் ஒத்தைப் பார்ப்பனனையும், மோர் வாங்கப்போகும் மொட்டைப் பார்ப்பனத்தியையும் பார்த்து, மனிதன் பயப்படவேண்டிய நிலையிலிருக்க வேண்டுமேயன்றி, தைரியமிருக்க முடியாது.

மேல்நாடுகளில் கடவுளைத் தொழுவதற்கு ஒரு குறிப்பிட்ட நேரந்தான் நிர்ணயித்திருக்கின்றனர்கள். ஞாயிறுகாலை. மற்ற நேரங்களில் அவரார்கள் தொழிலைக் கவனிப்பதும், ஆராய்ச்சி நடத்துவதும், வாணிபம் புரிவதுமான காரியங்களைக் கவனிக்கின்றனர்கள். இங்கு அப்படியில்லை! உண்ணும்போதும், உறங்கப்போகும் போதும், எழுந்திருக்கும்போதும், உட்காரும்போதும், பொய் சாட்சி சொல்லப் புறப்படும்போதும், கள்ள வாணிபம் செய்யும் போதும், கொள்ளையடிக்கும் போதும் கூடக் கடவுள் பெயரைச் சொல்லாதவர்கள் இல்லை. அப்படிச் சொல்லுவதானது, அதை நம்பும் பாமர ஏழைகள், படுபாதாளத்தில் தள்ளப்படவும், மேனி குலுங்காமல், பள பளப்பான வாழ்க்கையைப் பணக்காரர்கள் பெறவும் ஏதுவாயிருக்கின்றது.

எல்லாம் அவன் செயல்.

நடப்பதும் படிப்பதும், உண்பதும் உறங்குவதும், காண்பதும் கடவுள் செயல் என்றால், இங்கர்சால் கேட்பதுபோல, "நடக்கக் கால்களும், பார்க்கக்கண்களும், படிக்க அறிவும், பேச வாயும், கேட்கக்காதுகளும் இருப்பானேன்? அதனதன் வேலைகளை கவனிக் கத்தனித்தனியே உறுப்புகளைக்கொடுத்து, அதை நடத்த மூளையும் கொடுத்து, அதை விருத்தி செய்ய அறிவையும் கொடுத்து, அவை களைக் கொண்டும் மனிதன் ஒன்றும் செய்ய இயலாதவனென்றால், மனிதன் பகுத்தறிவு உடையவன், மற்றெல்லா உயிரினங்களைக் காட்டிலும், மனிதனே மேலானவன் என்று புகழ்வானேன்?"

மனித யந்திரம்.

மனிதன் ஒரு யந்திரம் போன்றவன். அவனை இயக்க ஒரு வன் தேவை, என்ற ஆராய்ச்சிக்குப் புகுவோமானால், யந்திரம் செய்து முடித்த அவ்வளவு வேலைகளும், அந்த மனிதனே செய்த தாக அர்த்தமா? அல்லது அந்த யந்திரத்தோடு, மனிதன் போட்டி யிட முடியுமா? அப்படியே அந்த மனித யந்திரம், ஏதாவது பழுத டைந்து நின்றுவிட்டால், அதைக் கண்டுபிடித்தவனே வந்து பழுது பார்க்கின்றான் என்று பொருள்? அதன் விஷயங்களை நன்றாகத் தெரிந்தவன், அதைப் பழுது பார்ப்பதில்லையா?

அதேபோல், மனிதன் நோய்வாய்ப் பட்டிருப்பது, கடவுள் செயலானால், தன் மருத்துவ முறையின் மூலம், நோயைப் போக்கி மனிதனைக் குணப்படுத்தும் மருத்துவனே கடவுளை விடப் பெரிய வன் என்று கொள்ள வேண்டாமா?

ஒரு மனிதன் தவறு செய்வது ஆண்டவன் செயலானால், அவனை நல்லுரைகளின் மூலம் நல்லவனாக்கிய அறிஞனே ஆண்டவனை விட மேலானவனல்லவா? எல்லா மக்களையும், ஆண்டவனே படைத்தார் என்பதை நாம் ஒப்புக் கொள்வதானால், வெள்ளைக்காரனையும் ஆண்டவன்தானே படைத்தார்? அந்த வெள்ளைக்காரன் நம்மை அடக்கியாண்டதை நாம் ஏன் அவமான

மாகக் கருதினேம்? அதுவும் ஆண்டவன் செயல் என விட்டு விட்டோமா?

கடவுளிடம் வேலையில்லை.

பெருவாரியாக, ஏழைகள்தான் ஆண்டவனைக் கும்பிடுகிறார்களே தவிர, பணக்காரர்கள் அதிகமாக ஆண்டவனைத் தொழுவதில்லை. அதற்குப் பதிலாக ஏதாவது சொத்துக்களைக் கோயிலுக்கு தர்மமாக எழுதி விட்டால், அன்றுடம் ஆண்டவனைக் கும்பிட்ட பலன் அந்த தருமச் சொத்திலேயே அடங்கிவிட்டது என்று நினைக்கின்றார்கள். மேலும் அவர்கள் அதிகமாகத் துன்பத்தால் பீடிக்கப் படுவதில்லை. அந்தத் துன்பம் அவர்களை வாட்டாதபோது, அந்தத் துன்பத்தை ஒப்படைக்கும் இடம் என்று மக்களுக்குக் கற்பிக்கப் பட்டிருக்கும் கடவுளிடம், அவர்களுக்கு வேலையில்லாமல் போய் விடுகிறது.

எடுத்தற்கெல்லாம் துன்பப்படும் ஏழைகள், ஆறுதலுக்காக ஆண்டவனிடம் அடிக்கடி தொடர்பு வைத்துக் கொள்கின்றார்கள். எடுத்துக்காட்ட வேண்டுமானல், திருப்பதிக்கும், திருத்தணிக்கும், பழனிக்கும் போகும் பக்தர்களை நீங்கள் பார்க்கலாம். 7-8-குழந்தைகள், கிழிந்த ஆடை, ஏதோ இரண்டொரு தட்டு முட்டு, வாங்க வேண்டிய 5-பிரயாணச் சீட்டுக்கு பதில் 3-வாங்குவது. டிக்கட் பரிசோதகரிடம் திட்டும், அடியும், உதையும் வாங்குவது! சில பக்தர்கள் டிக்கட் இல்லாமலே பிரயாணம். வழியிலே இறக்கி விட்டு விடுதல், அங்கிருந்து வேகாத வெய்யிலில், கால் சிவக்க நடந்து போதல், ஆகிய இவ்வளவு தொல்லைகளுக்கு மிடையே ஆண்டவனைத் தரிசித்து ஆறுதல் பெறப் போகின்றார்கள்!

கண்ட பலனென்ன ?

அங்கு போன பின்பாவது, இதுவரை அவர்கள் பிரயாணத்தில் பட்ட தொல்லைகள் தீருமளவுக்கு, ஏதாவது ஆறுதல் கிடைக்கின்ற முறையில், கோயில்கள் அமைக்கப் பட்டிருக்

கின்றனவா? திறந்த வெளியாகத் தொடங்கி, உள் நோக்கிப் போகப் போகக் குறுகி, ஆண் பெண் என்ற வித்தியாசமில்லாமல் ஒருவரோடொருவர் முட்டி மோதிக்கொண்டு சாவதும், குழந்தைகள் இந்த ஜனத்திரளின் காலடியில் சிக்கிக் கூழ்போல் மிதிபட்டுச்சாவதும், சில குழந்தைகள் காணமற் போவதும், சில குழந்தைகள் அணிந்துகொண்டிருக்கின்ற அற்ப நகைகளுக்காக, அவைகளைக் கொலைசெய்து, கேணியில் எறிந்துவிடும் கொடுமைகளும், தாய்மார்கள் அணிந்திருக்கின்ற நகைகளைக் கத்தறித்துக்கொண்டு ஓடுவதுமான எவ்வளவோ கொடுமைகள் நடப்பதும், இன்றும் பார்க்கின்றோமே! இதைநீக்கும் வழிபற்றி, இந்திய சுதந்திரத்தின் பிறகாவது சிந்தித்தார்களா?

அயலான் ஆண்டுக் கொண்டிருந்த போது, ஒரு வண்டி தவறுமல் பார்த்த பிச்சைக்காரர்களைவிட, இப்போது அதிகமாகத்தான் ஒவ்வொரு ரயில் பெட்டியிலும் காண்கின்றோம். இதைக்குறைக்க இதுவரை ஆட்சியாளர்கள் என்ன செய்தார்கள்?

திராவிட முன்னேற்றக் கழகம்.

தளராமுயற்சி, சலியாத உழைப்பு, தோல்விகாணாத வெற்றி, வாதப்போர் நடத்தும் திறம், மதயுகம் மடிந்து, புதுயுகங் காணப் புன்முறுவலோடு வெளிவந்திருக்கும் லட்சிய வீரர்கள், அடங்கிய வீரக்கோட்டம் ஒன்றே ஒன்று! அதுதான் திராவிட முன்னேற்றக் கழகம். கானலை நீரென நம்பிய கயமைத் தனத்திலே இருந்து தப்பிய, புடம்போட்டு எடுத்தத் தங்கக்கட்டி, ரத்தஞ்சிந்தாத உணர்ச்சி, ஆயுதமெடுக்காத பண்பு, அறவழிச் செல்லும் நேர்மை ஆகியவைகளே அதன் எண்ணம்! நாடு அதன்வழி வர அதிக நாட்களில்லை. சிந்தனையை அடிப்படையாகக் கொண்ட சிறந்த வாழ்வு மலரப் போகிறது. நாம் காணவே போகிறோம். இதோ உலக அறிஞர்கள் சிலரின், சிந்தனைப்பொறிகள் சிலவற்றைக் காணிக்கையாகப் படைக்கின்றோம் சிந்தனைவிரும்பிகளுக்கு!

சிந்தனைப் பொறிகள்.

"எவன் ஒருவன் பிறர் இன்பத்திற்காகத் தன் இருதயக் கதவுகளைத் திறக்கின்றானோ, அவனே தன்னுள் மறைந்திருக்கும் இன்பத்தைக் காண்கிறான்."

—எலிசபெத் கிப்சன்.

"நளினமான மூளையில்லாத நல்ல மனிதன், கைப்பிடியில்லாத வாளியைப் போன்றவன். அந்த வாளியில் பலவற்றை வைக்கலாம். ஆனால் சமயத்தில் அதை எளிதாகத் தூக்க முடியாது."

—பக்ரோஸ்.

"மனிதனுக்கப்பாலுள்ள எதைப்பற்றியுமே நான் சிந்திப்பதில்லை, ஏன்? உலகின் தேவைப் பொருளுக்கு ஆதி கர்த்தா மனிதன். பலவித எண்ணங்களின் நிலைக்களனும் அவனே. அவன் ஓர் மந்திரவாதி. இயற்கையின் சக்திகளையடக்கியாளப்போகும் வருங்காலத் தலைவனும் அவனே. இவ்வுலகிலுள்ள மிக அழகிய பல பொருட்களை உருவாக்கியது, மனித உழைப்பும், மனிதனின் கைத்திறனுந்தான். நம்முடைய எண்ணங்களும், கற்பனைகளும், விஞ்ஞானம், கலை முதலியவற்றின் அடிப்படையில் பிறந்தவைதாம். மனிதக் கற்பனையின் பலன்களுக்கப்பால், உலகிலுள்ள மற்ற எவற்றைப்பற்றியும் எண்ணிப்பார்க்க முடியாது. ஆகவே, மனிதனுக்குத் தலை வணங்குகிறேன்."

—மார்க்ஸிம் கார்க்கி.

"மனிதர்கள் வெளிச்சத்தைவிட, இருட்டையே விரும்புகிறார்கள். ஏனெனில், அவர்கள் செய்கைகள் எல்லாம் அனேகமாகக் கேடுதலானவைகளாக இருப்பதே அதற்குக் காரணம்."

—டால்ஸ்ட்டாய்.

"உன்னால் செய்யக்கூடியதைச்செய். செய்யப் போவதைப்பற்றிப்பெருமை கொள்ளாதே. செயலுக்குச் சொல்லைக் காட்டிலும் வன்மையதிகம். செயல் ஒன்றே அனுபவ பூர்வமானது."

—சிம்சன்.

"நீ என்ன செய்கிறாய் என்பதல்ல, எப்படிச் செய்கிறாய் என்பதொன்றே உன் திறமையின் அளவுகோல்."

—ஹென்றி வார்ட் பீச்சர்.

"ஒரு துளி மை, முழுத்தாளில் எழுத்துக்களை விதைப்பதைப் போல், உன்னிடம் ஒரே ஒரு கெட்ட பழக்கமிருந்தாலும், உன் தகுதியைக் கெடுத்துவிடும்."

—ஒசஸ்புல்லோ.

"மனிதன் தான் மதத்தை உண்டு பண்ணுகிறானே தவிர, மதம் மனிதனை உண்டு பண்ணவில்லை. மதம் என்பது, ஒடுக்கப்பட்ட பிராணியின் புலம்பல். மனமில்லாத ஒரு ரகத்தின் உணர்ச்சி, உயிரில்லாத நிலமைகளின் உயிர். அது மக்களுக்கு அபினி. மக்களுக்கு மகிழ்ச்சி யளிப்பதாய் பிரமை காட்டுகிற மதத்தை ஒழிக்க வேண்டுமென்று கோருவது, மக்களுடைய உண்மையான மகிழ்ச்சியைக் கோருவதாகும்."

—காரல் மார்க்ஸ்.

"மக்களுக்கு உவப்பைத் தருவதால், உண்மையை நேசிக்கலாம். மக்களுக்கு நியாயந் தெரிவதால், நியாயத்தை நேசிக்கலாம். மக்களுக்கு இளகிய நெஞ்சம் இருப்பதால், ஈகையை நேசிக்கலாம். ஒன்றுமே தெரிந்து கொள்ள முடியாத நிலையிலிருப்பதாகச் சொல்லப்படும் கடவுளை எப்படி நேசிப்பது?"

—இங்கர்சால்.

"ஆபத்தில் உதவாத சுற்றம், சண்டையில் வேகமாய் ஓடாத குதிரை, கேட்ட வரத்தைக் கொடுக்காத கடவுள், கைவிடவேண்டியவைகளே."

—வேமன்னு.

"ஆராய இயலாதவன் குருடன், ஆராய மனமில்லாதவன் மடையன், ஆராய பயப்படுபவன் அடிமை."

—வில்லியம் பெர்னர்டு,

"எந்த இனத்திற்கு ஆடம்பரத்திலே பற்று உண்டாகி விடுகிறதோ, அந்த இனம் தனது போர்த்தன்மையை இழந்து விடுகிறது. சரித்திரம் இந்த உண்மையை நமக்குப்போதித்திருக்கிறது. போர்க் குணமுள்ள ஓர் இனந்தான், தன் சுதந்திரத்தைக் காப்பாற்றிக்கொள்ள முடியும். அந்த இனத்திற்கு ஒழுக்கமிருந்தால்தான், அது சுதந்திரத்தோடு கூடியிருப்பதற்குத் தகுதியுடையது".

—ரூஸ்ஸோ.

"நாம் பணக்காரராயிருக்கக் கடமைப்பட்டில்லை. ஆனால் ஒழுக்கமுள்ளவர்களா யிருக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்."

—பெர்னர்ட்டு ஷா.

"மதம் என்றால், குருட்டு நம்பிக்கை, வெறி, பிற்போக்கு, ஆராய்ச்சிக் கடங்காத கொள்கை, மூடபக்தி, சுரண்டல், பரம்பரைப் பாத்தியப் பாதுகாப்பு என்று எனக்கெப் போதுமே தோன்றும்."

—ஜவகர்லால்.

"இந்து சமூகம் என்ற வார்த்தைக்கே பொருளில்லை, அது வெறும் கற்பனை. இந்து என்ற பெயரே வெளிநாட்டார்

சூட்டியது. முகம்மதியர் படையெடுப்புக்கு முன்புள்ள சமஸ்கிருத நூல்களில், இந்து என்ற பதமே காணப்படவில்லை.''

—டாக்டர் பி. ஆர். அம்பேத்கார்.

''எந்த நாட்டு மக்கள் சமூக சீர்திருத்தமில்லாமல், அரசியல் சுதந்திர இயக்கம் நடத்துகிறார்களோ ; அவர்கள் நாட்டின் உண்மை நிலையை அறியாதவர்களேயாவர்.''

—லாலா லஜபதிராய்.

''எந்தப்பிரச்சினையும், ஒருவருடைய பகுத்தறிவுகொண்டு சீர்தூக்கிப் பார்க்கப்பட வேண்டும், என்பதைப் பேச்சளவில் பலர் ஒப்புக் கொள்கின்றனர். ஆனால் ஒரு குறிப்பிட்ட விஷயத்தில், சொந்த உணர்ச்சிகள், பழமையான நம்பிக்கை, வேறு யார்மீதேனும் கொண்டுள்ள பக்தி, இவற்றிற்காக இந்த வழியினின்றும் தவறவே முயலுகிறார்கள்.''

—டாக்டர், பராஞ்சிபே.

''கேடுகளைத்தான் பத்திரமாகக் காப்பாற்றிக்கொண்டோம். சாதிகளை ஒழித்து முன்னேற்றம்பெற நாம் வழிவகுக்கவேயில்லை. நமது சாத்திரங்கள் : சாதிப்பிரிவுகளைக் கடக்கக்கூடாதென்றும், கடந்தால் ; அவ்வளவு பாவம், இவ்வளவு தண்டனை என்றெல்லாம் சொல்லி, நம்மையடக்கி ஒடுக்கி விட்டது.''

—இரவீந்திரநாத் தாகூர்.

'' தீங்கைத்தாங்குவதைவிட, நன்மையைத் தாங்குபவனுக்குப் பெரும் பண்புகள் தேவை.''

—பிளேவல்.

''காரணம் கேட்காமல் ஒப்புக்கொள்வதே நம்பிக்கை, என்று சமயவாதிகள் கூறுகின்றனர். முரணானவைகளை, அசம்பாவிதங்களை, நம்பித்தீர வேண்டுமென்று மதங்கள் கட்டாயப்படுத்துகின்

றன. இதனைல் நம்பிக்கை, பகுத்தறிவுக்கு முரணனதென்று ஏற்படுகிறது.''

—ஜீன் மெஸ்லியர்.

''மனிதன் பல தலைமுறைகளாக நடந்தும், பாதுகாத்தும் வந்த ஒழுக்க முறைகளில், இன்று பெரும் மாறுதல் தேவைப்படுன்கிறது. பழைய முறைப்படியே நடப்பவன் எண்ணற்ற துன்பங்களுக்கும், ஆபத்துகளுக்கும் ஆளாக நேரிடும்.''

—எச். ஜி. வெல்ஸ்.

''மேன்மேலும் உயர்வோம் என்று விரும்பி முயல்கின்றவர், தம்முடைய புகழ் கெடுவதற்குக் காரணமான செயலைச் செய்யாயல் விடவேண்டும்.''

—திருவள்ளுவர்.

''மனிதவர்க்கத்தின் அறிவின்மையால், இதுவரை இழக்கப்பட்டு வந்த இலட்சிய நம்பிக்கைகள், இப்பொழுது நம்முடைய அறிவு வளர்ச்சியால், நமக்கு எட்டும் தூரத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன, மனித வர்க்கம் அந்த வாழ்க்கை லட்சியங்களைப் பெற, சர்க்கார் துணையாக நிற்கட்டும்.''

—பெர்ட்ராண்ட் ரஃசல்.

''நமது மனதுக்கும், செயலுக்கும் நாம் ஏற்படுத்தும் தொடர்பே நடத்தை என்பதாகும். புராணங்கள், சாத்திரங்கள், நீதி போதனைகள் முதலியவற்றில் அதிகப்பற்றுடையவர்கள், இதனை மறந்துவிடுகின்றனர். தனது நடத்தை, தனக்காக, தானே அமைத்துக்கோள்வதல்ல: அது விதியின் கையில் இருக்கிறது என்பார்கள்.''

—இ. ஆர். தாம்சன்.

"கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும், கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப்போக."

—இராமலிங்கர்.

"மனிதன் சூழ் நிலையால் உருப்பெறுகிறான். சூழ் நிலை சரியாக இருந்தால் வளர்ச்சியடைகிறான். இல்லையேல் அவனது வளர்ச்சி தடைப்படுகிறது."

—லாக்.

"சட்டங்களுக்குப் பயந்து நடப்பது, வரிகளை ஒழுங்காகச் செலுத்துவது, அரசாங்கத்திற்குத் துரோகம் செய்யாதிருப்பது, ஆகியவைமட்டும் தனி நபரின் கடமைகள் என்று கருதக்கூடாது. எது சரியோ; அதைத் தெரிவிப்பதோடு, அமுல் நடத்தவும் வேண்டும். எது தீயதோ; அதைக் கண்டு பிடிப்பதோடு முறியடிக்கம் வேண்டும்."

—எட்மண்டு பர்க்.

"ஒவ்வொரு நாளும், புதுப்புது நிலைக்கு வழி காட்டுகிறது. இது பழைய காலமன்று, புதிய தோற்றம், புதிய உண்மை, புதிய வாழ்க்கை முறை, புதிய திட்டம், புதிய சமூகம், புதியகாலம் இவற்றிற்கு இஃதோர் முன்னோட்டம்."

—ஜேம்ஸ் ஆலன்.

காலமாறுதல்.

செயலற்றுக் கிடந்த உலகை, சிந்தனை செயலுக்குக்குத் தூண்டியது! கற்கால மனிதன் விற்கால மனிதனாய், விலங்கினங்களை வேட்டையாடித் தின்ற அந்த நாள்முதல், பொற்கால மனிதன், நற்காலமென்றெண்ணிய காலம் வரையில் ஏற்பட்டமாறுதல்கள், விண்மீன்களைக்காட்டிலும், ஆற்றின் மணலுக்கும் அதிக

07,6N(1,c
N50

மாய் அளவிட ஒக்கும். இன்றைய ஏழையின் பத்தாக்குரலைப் புரட்சி என்கின்றனர். இது நமது கற்பனைக்கெட்டாத கருத்தென்று இக்கால விஞ்ஞானி உதட்டின் ஓரத்தில் சிரிக்கின்றான். ஏனெனில், இன்று மனித ஜீவன் செயலற்றுப் போகுமளவுக்கு உலகச்சூழ்நிலை அவனைச் சுற்றிநின்று தாக்க, தாங்க முடியாது அவன் புலம்புவதைப்புரட்சி என்கின்றனர். ஒரு காலத்தில் அவன் தான் இயந்திரப்புரட்சியை உண்டாக்கியவன்: அதை துரிதப்படுத்த நீராவிப் புரட்சியைக் கண்டான்; அதையும் துரிதப்படுத்த மின் சாரப் புரட்சியைக் கண்டான், அதன்மூலம் பெற்ற பொருள், உற்பத்திப் பெருக்கம் ஆகியவைகளே, அவன் மனித சமூகத்திற்கு வைத்த இணையற்ற காணிக்கைகள். அவைகளை அவனடைந்தது ஆண்டவன் அருளால் அல்ல, சிந்தையென்ற பெருந்தகை, தனக்குக் கைம்மாறு கருதாதளந்த கருந்தனம்.

சிந்தனையே நீ வாழி !

சிந்திப்பதே குற்றமென்ற செப்படி வித்தைக்கு, அவன் இனி ஏமாறப் போவதில்லை. ஏனெனில் பொருள்களைக் கண்டான்: பொருளின் தேவையைக் கண்டான், இயற்கை இயக்கத்தைக் கண்டான். அந்தப்பொருளியக்கத்தின் எதிர் மறையால் ஏற்படுகிற இன்ன பிறவற்றைக் கண்டான். எழில்மிகுந்த உலகுக்குச் செயல் உருவம் தந்த சிந்தனையே, நீ வாழியென வாழ்த்திற்று மனம், பிறகு சிந்தனைச்சுடரே! நீ செம்பரிதியின் சுடரே போல் இறவாது வாழ்வாயாக ! என்று வாயாற வாழ்த்திய வண்ணம் வழி நடந்தான்.

ARCHIVES LIBRARY
111767

நாட்டுக் கேற்ற நல்ல நூல்கள்.

திருக்குறள் இசைப்பாடல்கள்.

அறத்துப்பால்—பாவலர். வேலாயுதசாமி. **0-7-0.**

இசையரங்குகளில் குறள் நெறி பரப்பும் இன்னிசைத் தமிழ்ப்பாடல்கள். ஒவ்வொரு பாட்டிலும் ஒரு முழுக்குறள்! பத்திரிகைகளால், பாவாணர்களால் பாராட்டப்பெற்றது.

★

மின்னொளி.— ப. கண்ணன். **0-6-0.**

கிராமிய வாழ்க்கை நிலையைச் சித்திரிக்கும் சீர்திருத்த நாடகம். கருத்தமைந்த பேச்சுக்களால் பழமையைத் தகர்த்து, புதுமைக்கு வழிவகுப்பது.

★

ஒரே முத்தம்.—மு. கருணாநிதி. **1-4-0.**

சுவையுள்ள நிகழ்ச்சிகள், சூறாவளிப் பேச்சுகள் நிறைந்த சரித்திரக் கற்பனை நாடகம். நடிப்புக் கலைஞர்களுக்குத் தேனும், படிக்கும் ரசிகர்களுக்குப் பாலும் போன்றது.

(அச்சில் 2-ம் பதிப்பு.)

★

கெட்டிக்காரன்.—ப. க. குஞ்சிதம். **0-2-6.**

பள்ளி மாணவர்கள், சிறுவர், சிறுமியர்க்குப் பகுத்தறிவூட்டும் பாங்கான மூன்று நல்ல சிறு கதைகள்.

★

இவை யாவும்

தித்திக்கும் தென்றல் வெளியீடுகள்!

அடுத்து வருபவை.

THE REGISTRAR OF BOOKS
NOV 1950
MADRAS

சிந்தனைச் சித்திரம்.

தோழர். ப. கண்ணன், எழுதிய உணர்ச்சியூட்டும் பகுத்தறிவுச் சிறு கதைகள்.

வால்முளைத்த சாமியார்.

தோழியர். ப. க. குஞ்சிதம், எழுதிய சிறுவர்க்கேற்ற விநோதச் சிறு கதை.

பாலைவனக் குயில்கள்.

தோழர். இராம. அரங்கண்ணல், எழுதிய பிறநாட்டுப் புரோகிதக் கொடுமையின் விளக்கம்

பேராசிரியர் இராமசாமி.

தோழர். மு. இராசகோபாலன் B. A., எழுதிய காலஞ்சென்ற பிரின்சிபால் அவர்களின் வாழ்க்கை வரலாறு.

இவை யாவும் தென்றல் வெளியீடுகள்.